# கண்ணியில் சிக்கிய 'பவள்' வெடித்துச் சிதறியது!

(திருமலை)
திருகோணமலை பாலம்போட்டாறு பகுதியில் நேற்று (ரோ)ந்து வந்த கடற்படை வாகனங்கள் மீது புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் பவள் கவசவாகனமொன்று வெடித்துச் சிதறியது.

நேற்று நண்பகல் பாலம்போட்டாற்றிலுள்ள கடற்படை முகாமிலிருந்து வெளியேறிய கடற் (4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 38 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 15 இதழ்: 232
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 1-10-1991

## 21 இந்திய மீனவர்களும் திருப்பி அனுப்பப்படுவர்

(சென்னை)
விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலுள்ள 21 இந்திய மீனவர்களும் பத்திரமாக இந்தியாவிற்கு திருப்பி அனுப்பப்படுவார்களென புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி (4-ம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவையிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)
விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருந்த 21 இந்திய மீனவர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்துச் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.
(4-ம் பக்கம் பார்க்க)

# ● அம்பாறை மாவட்டத்தில் புலிகளின் அதிரடித் தாக்குதல்: 11 இராணுவத்தினர் உயிரிழப்பு!

(மட்டக்களப்பு)
அம்பாறை மாவட்டத்தில் நேற்றுக்காலை சுமார் 6-15 மணியளவில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட திடீர் அதிரடித்தாக்குதலில் பதினொரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட படையினரிடமிருந்து விடுதலைப்புலிகளால் பல ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

தாக்குதல் நடைபெற்ற இடத்தில் ஒன்பது படையினர் கொல்லப்பட்டார்கள். ஏனைய இருவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

ரி. 56 இரண்டு ரக துப்பாக்கிகள் 6. ரி. 56 ரக துப்பாக்கிகள்-3, இதற்குரிய ரவைக்கூடுகள்-9 போன்ற ஆயுதங்களே இத்தாக்குதலில் புலிகளால் மீட்கப்பட்டவையாகும்.

கடந்த 3 நாட்களின் பின் நேற்றுக்காலை இரு தரப்பினரிடையேயும் சமூகமோதல் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது. (ஸ)

வடபகுதி

## விவசாயிகளுக்கு மீண்டும் கடன் வழங்க சம்மதம்

(யாழ்ப்பாணம்)
வடபகுதி விவசாயிகளுக்கு மீண்டும் கடன் வழங்குவதற்கு அரசு சம்மதம் தெரிவித்துள்ளது. இராணுவ நடவடிக்கைகளினால் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக மேற் (4-ம் பக்கம் பார்க்க)

புலிகளுக்கு

## அரசு ஆயுதம் வழங்கியதை ரணில் ஒப்புக்கொண்டார்

(கொழும்பு)
அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதை சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான திரு. ரணில் விக்கிரமசிங்க ஒப்புக்கொண்டுள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஐ. தே. கட்சிக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் ரணில் [4-ம் பக்கம் பார்க்க]

## பத்திரிகையாளர் வேடத்தில் இரகசியப் பொலிஸார்

(கொழும்பு)
தான் நடாத்தும் பத்திரிகையாளர் மாநாட்டில் சி. ஐ. டி. யினரும் கலந்து கொள்வதாக திரு. லலித் அத்துலத் முதலி குற்றம் சாட்டியுள்ளார்.

இவர்கள் தம்மை சி. ஐ. டி. யினர் எனக் கூறிக்கொண்டு நேரடியாக வரலாம். ஏன் பத்திரிகையாளர்களின் பெயரை பயன்படுத்துகிறார் (4-ம் பக்கம் பார்க்க)

## புதிய ஐந்து எம்.பி.க்கள்

(கொழும்பு)
நாடாளுமன்றம் இம்மாதம் எட்டாம் திகதி கூடும்போது சுயேட்சைக்குழுவின் (ஈரோஸ்) புதிய ஐந்து எம்.பிக்களின் பெயர் பட்டியல் வெளிவருமென்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. [158]

## ஒருமாத காலத்துக்குள் ஓய்வூதியம்

(கொழும்பு)
ஊழியர் ஒருவர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதும், ஒரு மாத கால எல்லைக்குள் அவர் தனது ஓய்வூதியத்தை சரியான முறையில் பெற்றுக் கொள்ளக் கூடிய முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட (4-ம் பக்கம் பார்க்க

புலிகள் விவகாரம்

## மத்திய அரசு அலட்சியம் ஜெயலலிதா கவலை

(சென்னை)
விடுதலைப் புலிகளுக்கு எதிராக தாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு உதவத் தயங்குவதாக தமிழகமுதல்வர் செல்வி ஜெயலலிதா கவலை தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து புலிகளை வெளியேற்றவும், அங்கிருக்கும் புலிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை மேற்கொள்ள அதிகளவு நிதி ஒதுக்குமாறும் தாம் விடுத்த கோரிக்கையை 4-ம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் சம்பள உயர்வு இன்னமும் முடிவில்லை

(கொழும்பு)
"ஆசிரியர் சம்பள உயர்வு பற்றிய விடயம் இன்னமும் ஆலோசனை மட்டத்திலேயே இருக்கின்றது. ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது என வெளிவந்த செய்திகள் தவறானது".

இவ்வாறு கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

அந்த அதிகாரி இதுபற்றி மேலும் கூறுகையில், ஆசிரியர்களின் சம்பள உயர்வுதொடர்பாக நிதி அமைச்சு பொது (4-ம் பக்கம் பார்க்க)

## சார்க் மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளாது?

(புதுடில்லி)
இலங்கையில் நவம்பர்மாதம் நடைபெறவுள்ள 'சார்க்' உச்சி மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளுமா என்பது குறித்து (4-ம் பக்கம் பார்க்க)

## 3 மீனவர்களைக் காணவில்லை

(சென்னை)
திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை மீன்பிடிக்கச் சென்ற 3 மீனவர்கள் காணாமற் போயுள்ளனர்.

இவர்களை தேடும் பணியில் ஹெலிகொப்டர் உதவியுடன் கடற்படையினர் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜெர்மனியில் ஈழத்தமிழர் அகதி முகாம்கள் தாக்குதல்

(பொன்)
ஜெர்மனியில் இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியுள்ள அகதிகள் முகாம்கள் மீது குண்டுத் தாக்குதலும், கல்வீச்சும் நடைபெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
[4ம் பக்கம் பார்க்க]

## 1-ம் ஆண்டு நினைவமுதம்



### அமரர் கெங்காதேவி நடேசன்

(இலங்கை வங்கி சுன்னாகம்)

மலர்வு: 26-02-1952 உதிர்வு: 01-10-1990

நாட்கள் என்ற சுவடிகளாக
ஆண்டுகள் பல கடந்தாலும்
என்றும் வாடாத மலராய்
இதயத்தில் வீற்றிருப்பாய்
அன்பு அம்மா, உங்கள் அன்பு
முகமும் இனிய பேச்சும்
என்றும் எங்களை இவ்
வையகத்தில் வாழவைக்கும்
எங்கள் அம்மா!

அமைதி பெறுங்கள் எங்கள்
அன்பு தெய்வம் (கெங்கா)

அன்பு அப்பா
சு. நடேசன்,
பிள்ளைகள்: ந. உதயசேகர், ந. உதயகுமார்,
உறவினர், நண்பர்கள்.

(சி-5422)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



### பெரியார் வ. வ. இராமசாமிப்பிள்ளை

மண்ணுலகில்: 11-03-1898 விண்ணுலகில்: 26-09-1986

திதி: 01-10 1991

பாசமே உருவான எங்களின் குடும்பவிளக்கிற்கு இந்நாளில்

உற்றார், உறவினர்,
குடும்பத்தினர்கள்
நினைவு கூருகிறோம்.

அம்மன் சோலையடி,
வல்வெட்டித்துறை.

(சி 5418)

## அதிபர்கள் கழகம்

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட அதிபர்கள் கழகம் ஒன்று அண்மையில் அங்கு ராரப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. ப சண்முகராசா தலைமையில் இது நடைபெற்றது.

## வருடாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொட்டடி மீனாட்சி அம்மன் கிராம அபிவிருத்தி மாதர் சங்க வருடாந்த கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

## காயப்பட்டவர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள்

### — விசாரணையில் சாட்சியம்

(கொழும்பு)

''காயம் ஏற்பட்டதின் காரணத்தை வெளியே சொல்வதற்கு நோயாளிகள் பயந்து நடுங்கினார்கள். அவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு வருதற்குமுன்னர் அச்சுறுத்தப்பட்டுள்ளார்கள்.''

இவ்வாறு மட்டுநகர் வைத்தியசாலை பயிற்சி மருத்துவ அதிகாரி திரு பெரியதம்பி அருட்பிரகாசம், கொக்கட்டிச்சோலை அசம்பாவிதங்கள் தொடர்பாக விசாரணை செய்துவரும், ஜனாதிபதி ஆணைக்குழுவினர்முன்னிலையில் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

அவர் தமது சாட்சியத்தில் மேலும் கூறுகையில்; ''கொக்கட்டிச்சோலை ஒரு பின்தங்கிய கிராமம். அங்கிருந்து காயக்காரர்கள் நீண்ட நேரத்தின் பின்பே மட்டுநகர் ஆஸ்பத்திரிக்கும், பொலநறுவை ஆஸ்பத்திரிக்கும் தொண்டர் ஸ்தாபனங்களினால் கொண்டுவரப்பட்டனர். மட்டுநகர் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை நிபுணர்களோ அல்லது பிரான்சு தேசத்தைச் சேர்ந்த வைத்திய நிபுணர்களோ எவரும் இல்லாதினால் படுகாயமடைந்தவர்கள் பொலனறுவை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்கள்'' என்று கூறினார்.

மேல் விசாரணை நாளை 2ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (வி)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 13-09-1941

இறப்பு: 11-09-1990

திதி: 01-10-1991



### மகேஸ்வரி பரமசாமி

அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய், குடும்பத்தின் குலவிளக்காய் எங்களுக்கு அமுதூட்டி ஆசிதந்து வாழவைத்த தெய்வமே! உங்கள் நினைவுகள் என்றென்றும் எங்கள் நெஞ்சத்தில் நிலைக்கும்.

அன்புக்கணவர் பரமசாமி,
பிள்ளைகள், மருமகன், பேரன், பேத்தி,

இணையாணை மேற்கு,
உடுப்பிட்டி.

(சி 1611)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி துரைச்சாமி செல்லம்மா

அன்னைமடியில்: 10-05-1922 ஆண்டவன் மடியில்: 11-10-1990

திதி: 01-10-1991

ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள்.

கல்வியங்காடு.

(சி-5402)

## 175ம் ஆண்டு நிறைவுவிழா

(பண்டத்தரிப்பு)

தென்இந்திய திருச்சபையின் யாழ். அத்தியட்சாதீன இலங்கை அமெரிக்கமிஷனின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழா பண்டத்தரிப்பு திருச்சபையினரால் அண்மையில் நடாத்தப்பட்டது.

பண்டத்தரிப்பு திருச்சபை ஆலயத்தில் நடைபெற்ற ஆராதனையை தொடர்ந்து பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் திருமதி ஏ. ஆர். தம்பிப்பா தலைமையில் பொதுக்கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அமெரிக்க மிஷனை சேர்ந்த திரு. குவிக் கொஸ்த் இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். (72)

## திலீபன் நினைவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற திலீபன் நினைவு தினப்போட்டியில் ஸ்ரீநாரதவித்தியாலய கரவெட்டியைச் சேர்ந்த மாணவர்கள் வெற்றிபெற்றுள்ளனர்கள்.

மேற்பிரிவு- ப. சரஸ்வதி, சி. தில்லைநாதன் 2ம் இடம்.

கீழ்ப்பிரிவு- இ யோகேஸ்வரி 2ம் இடம், செ. ஜெயக்குமார் 1ம் இடம்,

கவிதை- இ. யோகேஸ்வரி 1ம் இடம்.

## மக்கள் அஞ்சலி

(கொழும்புத்துறை)

மணலாறு மாவட்டத்தில் கடந்த 24ம் திகதி இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை மகிழன் (ராமலிங்கம் ஜொன்குமாரின் கொழும்புத்துறை) புகழுடல் அண்மையில் நண்பகல் கொழும்புத்துறை 2ம் குறுக்குத்தெரு அன்னாரது இல்லத்திலிருந்து ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

அநேக பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகளும், பொதுமக்களும் மகிழன் புகலுடலுக்கு மலர் வளையம் சாத்தி தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். வீதிகள், வீடுகள் தோறும் தோரணம் கட்டி, விளக்கேற்றி புகழுடலுக்கு மலர் சொரிந்து மக்கள் அஞ்சலியை செலுத்தினர். புகழுடல் ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தீயுடன் சங்கமமாக்கப்பட்டது. (154)

ஜனாதிபதி

# ஆட்சி முறையை மக்கள் ஆதரித்தால்

# நாம் அரசியலை விட்டு விலக தயார் - காமினி

(கொழும்பு)

"நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை இருக்கவேண்டுமென மக்கள் ஆதரித்து தீர்மானித்தால் நாம் அரசியலைவிட்டு வீடு செல்லத்தயாராக இருக்கின்றோம். ஜனாதிபதி ஆட்சி முறை தொடர்ந்து இருக்க வேண்டுமா? அல்லது பாராளுமன்றத்திற்கு அதிகாரங்கள் கொடுக்க வேண்டுமா? என்பதைத் தீர்மானிக்க சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடாத்தப்படவேண்டும்"

இவ்வாறு திரு. காமினி திசநாயக்கா, கடந்தவாரம் கேகாலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கூறியுள்ளார்.

இக்கூட்டத்தில் திரு. காமினி மேலும் கூறியதாவது:

அரசியலமைப்புச் சட்டத்தை கௌரவிக்காது, தான் தோன்றித்தனமாக அச்சத்தை முறியடித்துக் கொண்டு செல்வதை நாம் ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம்.

## எம். பிக்கள் கொலை

கடந்த பொதுத்தேர்தலின் போது, அமைச்சர்கள், எம். பிக்கள் அடங்கலாக ஆதரவாளர்கள் கொலை செய்யப்பட்டனர். இன்று அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களுக்கு ஒரு 'பியோன்' தொழில் வழங்குவதற்கான அதிகாரம்கூட இல்லை அதனை ஜனாதிபதியின் அதிகாரிகளே செய்கின்றனர்.

ஜனாதிபதிக்கு ஆதரவாக சுவரொட்டிகள் ஒட்டுவதற்கு பொலிஸ், இராணுவம் பயன்படுத்தப்படுகின்றன. அப்படியானால் வடக்கு- கிழக்குப் பகுதிகளில் யுத்தம் நடைபெறுவது எப்படி?

1989ம் ஆண்டு முடிவுக்குள் இந்திய அமைதிப்படை இலங்கையை விட்டுவெளியேறும் என இந்திய அரசு அறிவித்தது ஆனால் ஜனாதிபதி 89ம் ஆண்டு மார்ச் 15ம் திகதிக்கு முன்பு வெளியேறிவிடவேண்டுமென உத்தரவு பிறப்பித்தார். இந்தியப் படையின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு பதிலாக அந்தப் பொறுப்பை ஜனாதிபதி விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தார்.

## ஊழல்கள், உண்மைகள்

ரோகண விஜவீர பிடிபட்ட போது ஜனாதிபதியுடன் தொலைபேசியில் பேச சந்தர்ப்பம் தருமாறு அவர் வருந்திக் கேட்டபோதும் அது மறுக்கப்பட்டது.

அவர் தற்போது உயிருடன் இருந்திருந்தால் பல ஊழல்கள், உண்மைகள் வெளிவந்திருக்கும். ஐ. தே. கட்சி ஒரு ஜனநாயககட்சி. இதன் பெயரை மாசுபடுத்த நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்றும் கூறினர்.

## ரகசிய வாக்கெடுப்பு முறையே ஜனநாயகத்திற்கு சிறந்தது"

(கொழும்பு)

- லலித்

பாராளுமன்றத்தில் பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அச்சுறுத்தல்கள், பயமுறுத்தல்கள் ஏற்படலாம். ஆகையால் இரகசிய வாக்கெடுப்பு முறையே ஜனநாயகத்துக்கு சிறந்தது.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் திரு அத்துலத்முதலி கொழும்பில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது:

உலகின் எந்தநாட்டிலும் ஜனாதிபதி ஆட்சியில், அந்த ஜனாதிபதிக்கு எதிராக அரசியல் குற்றவியல்பிரேரணை கொண்டுவர முடியும். அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி திரு. நிக்ஸன் தொலைபேசி ஒட்டுக்கேட்டதற்காக அவர் மீது அரசியல் குற்றப்பிரேரணை கொண்டுவரப்பட்டது. ஆனால் எனது தொலைபேசி உரையாடல்களும் ஒட்டுக்கேட்கப்படுகின்றது.

நானும், அமைச்சர் பிரேமசந்திராவும் பதவிகளை ராஜினாமாச் செய்ததை இதுவரை வானொலியோ அல்லது தொலைக்காட்சியோ வெளியிடவில்லை; ஆனால் விடுதலைப் புலிகள் லண்டனிலிருந்து வெளியிட்ட அறிக்கை அடிக்கடி வானொலிகளிலும், தொலைக்காட்சியிலும் வெளியிடப்படுகின்றது. (25)

இராசி பலன்

01- 10 - 1991

செவ்வாய்க்கிழமை

தமிழுக்கு புரட்டாதி 15

அட்டமி பி.ப. 4-53வரை, திருவாதிரை பி.ப. 5-20வரை, மரணயோகம் இராகுகாலம் மாலை 3-02 முதல் மாலை 4-32 வரை, சுபநேரம் காலை 10-32 முதல் 12-02 வரை.

மேடம்: வசதிகள் அதிகரித்தல், செல்வந்தர் உறவு, குடும்பசுகம்.

இடபம்: இடமாற்றம், குடும்பக் கவலை, தொழில் அலைச்சல்.

மிதுனம்: குடும்ப மகிழ்ச்சி, வாக்கு வன்மை, பதவி மேன்மை.

கடகம்: அகம்பாவம், தொழில் உறவு, கருத்து மோதல்.

சிங்கம்: கடன் வசூல், பயணக் களைப்பு.

கன்னி: ஏமாற்றம், குடும்ப சிறப்பு, புதிய சிந்தனை.

துலாம்: குடும்பத்தொல்லை, அவசரமுடிவு, நோய் பாதிப்பு.

விருச்சிகம்: இனசனப்பகை, கடும் சினம், புத்திரர் கவலை.

தனுசு: தப்பபிப்பிராயம், சந்தேகப்படல், வெறுப்பு.

மகரம்: இனசன மகிழ்ச்சி, தொழில் லாபம், காரியசித்தி.

கும்பம்: துயரமான செய்தி, அதிகாரிகள் பகை, மனச்சுமை.

மீனம்: தனிமைப்படல், வீண் பகை, தேவையற்ற செலவு.

ஜோதிடர்

வறிய குடும்பத்தவர்கள்

## இலவச பதிவுத்திருமணம் செய்வதற்கு ஏற்பாடு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் திருமணம் செய்தும் இதுவரை பதிவுசெய்துகொள்ளத்தவறிய வறிய குடும்பத்தவருக்கு பதிவு திருமணம் இலவசமாக செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பதிவுத் திருமணம் செய்துகொள்ளத் தவறியவர்கள் தத்தமது பகுதி சனசமூக நிலையங்கள் ஊடாக உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேசசனசமூகநிலையங்களின் சமாசத்தின் மூலம் தமது பெயர்களைப் பதிவுசெய்து கொள்வதற்கு விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

வறுமை காரணமாகத் திருமணப்பதிவு செய்யாது பல குடும்பங்கள் வாழ்வது புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. இதனால் அக்குடும்பங்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை நிவர்த்திசெய்யும் முகமாக இலவசமாகத் திருமணப்பதிவு செய்யும் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாசங்கள் மூலம் சகல சனசமூக நிலையங்களும் தத்தமது பகுதிகளில் பதிவுத் திருமணம் செய்யாது இருப்பவர்களின் பெயர் விபரங்களைச் சேகரித்து திருமணப்பதிவுக்கான விண்ணப்பங்களை யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. டி. ஜகலாலாவுக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (154)

## படிவங்கள் தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகள், மத்திய மருந்தகங்கள், அரச திணைக்களங்களில் சில அத்தியாவசிய படிவங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (154)

கிணற்றில்

## வீசப்பட்ட சிசு பலி; காயங்களுடன் தாய் மீட்பு

(வடமராட்சி)

குடும்பப் பெண் ஒருவர் தான் பெற்ற சிசுவை கிணற்றுக்குள் வீசிவிட்டுத் தானும் குதித்துத் தற்கொலை செய்ய முயற்சித்த சம்பவம்வடமராட்சியில் நடந்துள்ளது. சிசு நீரில் மூழ்கி இறந்துவிட்டது. தாய் சிறுகாயங்களுடன்மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இப்பெண் தனது ஒரேபெண் குழந்தையை வீட்டிற்கு அண்மையிலுள்ள கிணற்றில் வீசிவிட்டுத் தானும் குதித்தார் என்று கூறப்படுகிறது. (51)

## விசர்நாய் கடிக்கு பலி

(கொழும்புத்துறை)

விசர்நாயொன்றின் கடியுண்ட கொழும்புத்துறையை சேர்ந்த கே. முத்துப்பிள்ளை (வயது 47) என்பவர் உடன் தகுந்த வைத்தியம் செய்யாததினால் மரணமானார்.

விசர்நாய்கடித்த சில தினங்களில் வவுனியா சென்று தங்கி அங்கு பன்றி இறைச்சியுடன் உணவு அருந்தியபின் இரண்டாம் நாள்மரணமானார்என்று கூறப்படுகிறது. (154)

## காய்ச்சல் பரவும் அபாயம்

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் மேற்கு பகுதியிலும் பண்டத்தரிப்புப் பகுதியிலும் இருமல் சளியுடன் கூடிய 'இன்புளுவென்சா' எனப்படும் காய்ச்சல்நோய் தீவிரமாகப் பரவி வருகின்றது.

ஒரு வீட்டில் ஒருவருக்கு இந்த நோய் ஏற்பட்டால் அங்குள்ள சகலருக்கும் இலகுவாக தொற்றிக் கொள்கிறது. [72]

நெல்லியடி

## மத்திய மகாவித்தியாலயம் இரண்டாக பிரிக்கப்பட்டது!

(வடமராட்சி)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் இரண்டாகப்பிரிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி, நெல்லியடிப் பகுதியில் மகளிர் பாடசாலை ஒன்று தேவையெனக் காரணம் காட்டி இவ்மாதங்களுக்குமுன் பாக ஆண், பெண்என்றுஇருபிரிவாகப்பிரிக்கமுயன்றபோதுபெற்றோர் எதிர்ப்புக்காரணமாக பிரிவுச் சம்பவம் பின்போடப்பட்டிருந்தது.

இவ்விடயம் மீண்டும் கடந்த மாதம் 27ம் திகதி மாலை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் வடமாநில கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தலைமையில் முறைசாராக் கல்வி அதிகாரி எஸ். சுப்பிரமணியம், கல்விப் பொறுப்பாளர் அருள்மாஸ்டர் ஆகியோர் முன்னிலையில் மீள்ஆய்வு செய்யப்பட்டது.

மகளிர் பிரிவு தேவையெனக் கருதப்பட்டு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் எட்டாம் வகுப்பிற்கு மேல் ஆண்கள் பாடசாலையில்மகளிர் கல்வி பயிலலாம் என்றும், அதற்குக் கீழ்ப்பட்ட மாணவிகள் கல்விகற்பதற்கு தற்போது இயங்கிவரும் செல்லையாபாடசாலையில் நெல்லியடி மகளிர் வித்தியாலயம் தனியாகஇயங்குவதுடன் தற்போது பதில் அதிபராக கடமையாற்றும் திருமதி சரோஜினி சுந்தரலிங்கம் மீண்டும் பதிலதிபராகக் கடமையாற்றவேண்டும் என்றும் எணிக்கப்பட்டுள்ளது.

இந்த மகளிர் வித்தியாலயத்திற்கான பெற்றோர் சங்கக்கூட்டம் விரைவில் நடைபெறவுள்ளதாகவும், நெல்லியடி மகளிர் வித்தியாலய அதிபர் திருமதி எஸ். சுந்தரலிங்கம் தெரிவித்தார். [51]


## தேவை - மேடைத்தராசு

நல்ல நிலையிலுள்ள மேடைத்தராசு (Platform Balance) ஒன்று உடனடியாகத் தேவைப்படுகின்றது. கைவசம் வைத்திருப்போர் விலை மற்றும் விபரங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(ஏ- 1610)

# தமிழக கரையோரங்களில்

# வீடு வீடாக பலத்த தேடுதல்

## 36 பேர் கைது

(சென்னை)

தமிழக கரையோரத்தில் அடர்ந்தகாட்டுப்பகுதி, சதுப்பு நிலப்பகுதி உட்பட பல பகுதிகளில் நேற்று முன்தினம் முழுநாள் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கையின்போது 36பேர் கைது செய்யப்பட்டனர்.

விடுதலைப் புலிகளையும், ஆயுதங்களையும் தேடிக்கண்டுபிடிக்கவே இச்சோதனை நடவடிக்கை இடம்பெற்றதாகதமிழக பொலிஸ்மா அதிபர் திரு. டபிள்யு. ஐ தேவாரம் தெரிவித்தார்.

சுமார் 1000 பொலிசார் நவீனரக ஆயுதங்களுடன் வீடு வீடாகச் சென்று எல்லாப் பகுதியிலும் தேடுதலை மேற்கொண்டனர். கள்ளக் கடத்தலில் ஈடுபட்ட 26 பேரும், புலிகள் என்ற சந்தேகத்தில் 8 பேரும் தற்போது கைது செய்யப்பட்டனராம். இச்சோதனை நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெறுமென்றும் திரு. தேவாரம் தெரிவித்தார். (சி)

## ஒருமாத

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்.

இவ்வறிவித்தலை, பொது நிர்வாக அமைச்சு நாட்டிலுள்ள சகல திணைக்களங்களுக்கும் அறிவித்துள்ளது.

ஊழியர் ஒருவர் ஒய்வு பெற்று, ஒரு மாதகாலத்துக்குள் அவருக்கு முறையான ஒய்வூதியம் கிடைக்காவிட்டால் அவருக்கு சரியாக ஒய்வூதியம் கிடைக்கும் வரை அவர் கடைசியாக எடுத்த சம்பளத்தில் 70 வீதத்தை வழங்க வேண்டும் என அமைச்சு வலியுறுத்தியுள்ளது. (வி)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி விளையாட்டுக் குழுக் கலந்துரையாடல், நாளை 2ம் திகதி காலை 10-30 மணியளவில் கோண்டாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவிருக்கிறது.

இதில் சகல விளையாட்டு உத்தியோகத்தர்கள், இளைஞர் சேவை அதிகாரிகள், வட்டவை விளையாட்டுப் பொறுப்பாளர்கள் மற்றும் விளையாட்டுக் குழுவின் செயற்குழுவினர் தவறாது கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## புலிகள் விவகாரம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய அரசு அலட்சியப்படுத்திவருவதாகவும் அவர் குறை கூறியுள்ளார்.

மேலும் பீகீட்டனிலிருந்து இட்டுவை வெளியேற்ற இந்தியா வற்புறுத்தியதுபோல் தமிழகத்திலுள்ள புலிகள் விடயத்தில் மத்திய அரசு நடந்துகொள்ளவேண்டுமென ஜெயலலிதா எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியால் நடாத்தப்பட்ட தியாகி திலீபன் நினைவு நடனவிழாவின் வட்டவை மட்டப் போட்டிகளிலும், சகல வழிகளின் உதவிகள், ஒத்தாசை புரிந்து போட்டிகள் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த சகலருக்கும் விழா அமைப்புக் குழுவினர் தமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றார்கள்.

## மட்டு. அம்பாறையில் ஊரடங்கு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நேற்றுக் காலை முதல் காலவரையற்ற ஊரடங்கு சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் படையினரின் தேடுதலுக்கு உதவியாகவே ஊரடங்கு அமுலுக்கு வந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை வடபகுதியில் சிலமாவட்டங்களில் ஊரடங்கு சட்டம் அமுலிலிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## வெளிநிலைப் பட்டப்படிப்பு பதிவு நீடித்தல் 1990/91

யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை.

வெளிநிலைப் பட்டப்படிப்பு பதிவு நீடித்தல் 1990/91

(வர்த்தக முதற் தேர்வு/ கலை முதற் தேர்வு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1990/91 கல்வியாண்டில் வெளிநிலைத் தேர்வு நாடிகளாக வர்த்தக முதற் தேர்வு/ கலை முதற் தேர்வுகளுக்குப் பதிவு காலம் 30-09-1991 இல் இருந்து 12-10-1991 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

(ஏ-1613)

## புலிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கா இதனைத்தெரிவித்தார்.

குறிப்பிட்ட காலப்பகுதியில் தென்னிலங்கையில் ஜே. வி. பி. யினரின் அச்சுறுத்தலும், வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழ் தேசிய இராணுவத்தின் அச்சுறுத்தலும் இருந்து வந்தது.

இந்த இரண்டு சக்திகளுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சிகள் அப்போது அரசாங்கத்தைக் கோரியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சார்க் மாநாட்டில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சரியான பதிலெதுவும் தெரிவிக்கப்படவில்லையென 'இந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

மேலும் இதுபற்றி இலங்கை சபாநாயகர் கருத்து வெளியிடுகையில், இம்மாநாட்டில் இந்தியா கலந்துகொள்வதும் விடுவதும் அவர்களைப் பொறுத்தது என்றார்.

எந்தக் காரணம்கொண்டும் 'சார்க்' மாநாடு நடைபெறும் இடம் மாற்றப்படமாட்டாது என்றும் இது பின்போடப்படமாட்டாது என்றும் அல்ஹாஜ் எம். எச் முகமட் கூறியுள்ளார். (சி)

## ஆசிரியர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாக அமைச்சு ஆகியவற்றுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு வருவதாகவும் அதற்கான அங்கீகாரம் இன்னும் கிடைக்கவில்லை என்றும் கூறினார். (வி)

## ஜேர்மனியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடதுசாரிக் கெரில்லாக்களே இவ்வாறு கடந்த இரு வாரங்களாக தாக்குதல் நடத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுவிஸிலும் இவ்வாறான தாக்குதல் நடைபெற்றாலும், தற்போது அந்நாட்டில் அகதி முகாம்களுக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது (சி)

## 24 இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜன்ரல் பாலசிங்கம் தெரிவித்துள்ளதாக 'இந்தியவானொலி' தெரிவித்தது.

இவர்கள் அனைவரும் இலங்கை கடற்படையினரால் மோசமாகத் தாக்கப்பட்ட நிலையில் கடலில் குதித்து நீந்தி நெடுந்தீவுக் கரையை கடந்த 2 வாரத்திற்கு முன் அடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவர்களுடன் வந்த மூவர் கடலில்உயிரிழந்துவிட்டதாகவும் இவர்களின் சடலங்கள் கடலில் மிதப்பதாகவும் தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

## பென்சன் வவுச்சர்கள்

(யாழ்ப்பாணம்)

ஆகஸ்ட், செப்டம்பர்மாதங்களுக்குரிய பென்ஷன் வவுச்சர்கள் யாழ். செயலகத்துக்கு கிடைத்துள்ளன.

இவ்வார இறுதிக்குள் மேற்படி வவுச்சர்கள் உரியவர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுமென்றுமாம். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

## பீரங்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதிக் கடலில் இருந்து குடியிருப்புக்களை நோக்கிப் பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஊரிக்காடு, வல்வெட்டித்துறை போன்ற பகுதிகளை நோக்கியே நேற்று முன்தினம் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் பொதுமக்களின் வீடுகள் சில சேதம் அடைந்தன.

## பாலையடிவெட்டையில் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டு மாவட்டத்திலுள்ள பாலையடிவெட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்றுரோந்து வந்த படையினரை வழிமறித்து புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

இத்தாக்குதலில் இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரிவிக்கப்படவில்லை.

## கல்முனையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் இருபதுக்கும் மேற்பட்ட வாகனங்களில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இவ்வாகனத் தொடர்மீது நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் கடற்படையினரின் பவள் கவச வாகனமொன்று வெடித்து சிதறியது.

இத்தாக்குதலில் கடற்படையினருக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றித் தெரிவிக்கப்படவில்லை.

இவ்வாகனத் தொடரில் 150 கடற்படையினர் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## செஞ்சிலுவை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்திடம் இவர்களை ஒப்படைப்பதற்காக யாழ்ப்பாணத்திற்கு விசேட கப்பல் ஒன்றை அனுப்பியுள்ளது.

இந்தியத் தூதரகத்தில் ஒப்படைக்கப்படும் இவர்களை, இலங்கை அரச பாதுகாப்புடன் தமிழ்நாட்டுக்கு அனுப்ப முன்வந்துள்ளது. கடலில் குதித்த 3 மீனவர்களைத் தேடி இந்திய விமானப்படை ஹெலிகொப்டர்கள் நேற்றும் கடற்பகுதியில் தேடுதல் மேற்கொண்டன. (சி)

## வடபகுதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படி கடன்வழங்குவதை அரசு நிறுத்தியிருந்தது.

அண்மையில் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் யாழ் மாவட்ட விவசாயிகளின் பிரச்சனைகள் பற்றி பிரதம மந்திரி திரு. டி. பி. விஜயதுங்காவுடன் நடாத்திய பேச்சுவார்த்தையின் நிமித்தமே இக்கடனை மீண்டும் வழங்குவதற்கு அரசு சம்மதம் தெரிவித்துள்ளது.

வடபகுதி விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கும்படி கொழும்பிலுள்ள இலங்கை வங்கித் தலைவருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். செயலகஅதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (வி)

## பத்திரிகையாளர்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை திரு. லக்ஷ்மன் செனிவரத்தின பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கையில், நான் மலையகத்துக்குச் சென்றபோது 3 வாகனங்கள் எனது வாகனத்தை பின் தொடர்ந்தன. கண்டியிலிருந்தே அவை பின் தொடர்ந்தன. மலையகத்திலிருந்து நான் தங்கியிருந்தேன். ஆனால் இச் சம்பவத்தையடுத்து உடனடியாக திரும்பிவிட்டேன். சிவில் உடையில் இருந்தவர்களே என்னை பின் தொடர்ந்தனர் என்றார். (சி)

## மரண அறிவித்தல்

### திருமதி றேஸ் அருளானந்தம்

(ஆசிரியை)

(சென். டொன்பொஸ்கோ மகாவித்தியாலயம்)

திருமதி றேஸ் அருளானந்தம் 20-9-1991இல் நீர்கொழும்பில் காலமானார். இவர் திருவாளர் அருளானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், மேவின், நிர்மலா, Dr. வேணடா, Dr. மைக்கல், அமலா, சாந்தி ஆகியோரின் அன்புத் தாயும், அன்ரன் தம்பிராசா, செபஸ்தியன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr. வேதநாயகம், Dr. பரமானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், யாழ். மறை மாவட்ட முதல்வர் பிதா மைக்கல்சாமி அடிகளாரின், திருமதி ராஜரட்ணம் ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரின் இறுதிப் பூசை 22-09-1991இல் வண. பிதா மைக்கல்சாமி அடிகளாரால் நிறைவேற்றப்பட்டது. நீர்கொழும்பு, சிலஸ்ரீட் சேமக்காலையில் நல்லடக்கம்செய்யப்பட்டது.

அறிவித்தல்: காலஞ்சென்ற திருமதி றேஸ் அருளானந்தம் என்பவருக்காக ஆன்ம இளைப்பாற்றிப் பூசை 1991 ஐப்பசி 4ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) யாழ். அருள் ஆச்சிரமத்தில் (5, கோவில் வீதி) மாலை 5-30 மணிக்கு வண. பிதா மைக்கல்சாமி அ. ம. தி. அடிகளாரால் ஒப்புக்கொடுக்கப்படும்.

தகவல் தருபவர்:

(சி 5423) வண. பிதா மைக்கல்சாமி அ. ம. தி.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களதுஅச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஒக்டோபர் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Postoffice Lanka under Licence Number B/10336/81.